**செ.வெ.எண்: 23** **நாள்: 21.05.2023**

# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அவர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள், முன்னாள்போர் வீரர்கள், வீர மங்கைகள் ஆகியோருடன் சென்னை,ஆளுநர் மாளிகையில் (21-05-2023) இன்று நடந்த 'எண்ணித் துணிக' நிகழ்ச்சியில் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம் .

அனைவருக்கும் வணக்கம். இன்று நமது படைவீரர்களையும் வீர மங்கைகளையும் (கணவர், பிள்ளைகளை இழந்த வீரப்பெண்கள்) போற்றுவதன் மூலம் நமது ஆளுநர் மாளிகை ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. உங்களை கௌரவிப்பதில் பாக்கியசாலியாக உணர்கிறோம். நம் நாட்டில் ஒரு சிப்பாயின் தேச பக்தியை இன்னும் நாம் முழுமையாகப் பாராட்டவில்லை என்றே நான் நினைக்கிறேன். பழங்காலத்திலிருந்தில் ஏன் மனித நாகரிகத்தின் தொடக்கத்திலிருந்தே ராணுவம், ஆயுதப்படைகள் போன்றவற்றின் பண்புகள், செயல்கள், வீரம் ஆகியவை விளக்கப்பட்டு பாராட்டப்பட்டு வந்துள்ளன.

சொல்லப்போனால், நமது திருக்குறளில் கூட, பலமான ராணுவத்தின் அவசியம், வீரம் பற்றி பல குறள்கள் இருப்பதை நான் காண்கிறேன். ஒரு அரசருக்கு வலிமையான ராணுவம் இருந்தால், அந்த அரசர் மகிழ்ச்சியாக இருப்பார். அத்துடன் அவரது ராஜ்ஜியம் பாதுகாப்பானதாக இருக்கும். அந்த ராஜ்ஜியத்தில் வாழும் மக்கள் மகிழ்ச்சியாகவும், வளமாகவும், தங்களுக்குத் தேவையானதை பெறக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். மக்கள் பாதுகாப்பின்மை உணர்வின்றி வாழ்கிறார்கள் என்று கூறும் குறள்கள் உள்ளன.

பண்டைய இந்திய காப்பியங்களில் ஒன்றான, சுக்ராச்சாரியாரால் (சாணக்யாவைப் போன்றவர்) எழுதப்பட்ட சுக்ரா-நிதியில் ராணுவத்தின் நற்பண்புகள் விளக்கப்பட்டுள்ளன. "வலுவான ராணுவம் இல்லா எந்தவொரு நாடும் தழைத்ததில்லை.வலுவான ராணுவத்தை கொண்டிருந்தால் நீங்கள் நண்பர்களால் சூழப்படுவீர்கள். அதுவே பலவீனமாக இருந்தால், எதிரிகளால் சூழப்படுவீர்கள்," என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஒரு வலிமையான ராணுவம் என்பது தேசத்தின் பெருமை மட்டுமல்ல, அது ஒரு பாதுகாவலனாக மட்டுமின்றி தேசத்தின் பெருமை மற்றும் கௌரவத்தின் காவலனாகவும் இருக்கிறது. ஒரு சிப்பாய் ஆயுதப் படையில் சேரும் போது - அது அவருக்கு 'வெறும் வேலை' இல்லை. தேசத்திற்கு தன்னை அர்ப்பணிப்பதோடு, நாட்டின் பாதுகாப்புக்காக தனது உயிரைத் தியாகம் செய்யத் தயாராக உள்ள அர்ப்பணிப்பாகும். அவரது உறுதிப்பாட்டை வெறும் வேலையாக நாம் பார்க்கக்கூடாது.

மோதல்கள், போர் அல்லது பதற்றங்கள் ஏற்படும் போது, ஒட்டுமொத்த தேசமும் ராணுவத்தின் பின்னால் எழுந்து நிற்கிறது, ஆனால் சாதாரண அமைதியான காலத்தில் ஒரு சிப்பாய் தனது வாழ்நாள் முழுவதும் ஆற்றிய சேவையை நாம் பாராட்டுவதில்லை.

முன்னாள் சிப்பாய்/ முன்னாள் போர் வீரர்கள் பற்றி நாம் பேசும்போது ஒரு சிப்பாய் என்பவர் ஒழுக்கத்துடனும்'தேச பக்தி'யில் உறுதியானவருமாக இருப்பார் என பேசுகிறோம். ஆனால், நம் நாட்டில், 'தேச பக்தி' மற்றும் 'தெய்வ பக்தி' எப்போதும் பிரிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. ராணுவத்தில் சேர்ந்த சிப்பாய் ஓய்வு பெற்று விட்டாலும் அவரது தேசப்பணி மற்றும் சிப்பாயின் கடமை முடிந்து விட்டதாக நாம் கருதக் கூடாது. ராணுவத்தில் பணிபுரிந்த வீரர் ஓய்வு பெற்றால், சமூகம் அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்கா நிலை உள்ளது.

ஆனால், தனக்கு உரிய மரியாதை கிடைக்கவில்லை என்பதற்காக அந்த முன்னாள் சிப்பாய் தமது தேசப்பற்று உறுதிப்பாட்டை கைவிடுவதில்லை. ஒரு சிப்பாய் ஓய்வு பெற்ற பிறகு முரட்டுத்தனமாக அல்லது ஒழுங்கற்றவராக மாறுவது மிகவும் அரிதாக நடக்கும் செயல், நான் அறிந்த சூழலில், இதுநாள் வரை அப்படிப்பட்ட நிகழ்வை கேள்விப்பட்டதில்லை. தாம் சரியாக கவனிக்கப்பட்டாலோ கவனிக்கப்படாவிட்டாலோ கூட அந்த சிப்பாய் ஒரு வீரனாகவே இருப்பார். அதற்காக அவர் எல்லை முன்னரங்கில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு ஓய்வு பெற்ற ராணுவ வீரர் தன் முன்னால் ஏதாவது தவறு நடப்பதைக் கண்டால், சிவில் மக்களைப் போல அவர் அமைதியாக இருக்க மாட்டார். சாதாரண மக்கள் தவறுகளை தட்டிக் கேட்கும்போது அவர்களை ஆபத்து சூழலாம். அதனால் சொந்த விருப்பு வெறுப்புகளுக்குள்ளேயே அவர்கள் தங்களை சுருங்கிக் கொள்வார்கள். ஆனால், ஒரு ராணுவ வீரர், தனது ராணுவ சேவைக்குப் பிறகும் நாட்டுக்கு விலைமதிப்பற்ற சொத்தாக விளங்கி வருகிறார். அதை உணர்ந்து செயல்படுவது சமுதாயத்தின் பொறுப்பும் கடமையும் ஆகும். ஆனால் துரதிருஷ்டவசமாக, ராணுவ வீரர்களின் அந்த உணர்வு நிலை பாராட்டப்படுவதில்லை. இதில் ஏற்படும் எண்ண - இடைவெளியை நாம் நிரப்ப வேண்டும்.

நான் தமிழ்நாடு ஆளுநராக வந்த பிறகு எந்த இடத்துக்கோ, மாவட்ட தலைநகருக்கோ சென்றால் அங்கே முன்னாள் ராணுவ வீரர்களை சந்திக்கும்போது அதை பெருமையாக கருதுவேன். அவர்களை சந்திக்க முன்னுரிமை கொடுப்பேன். அவர்களை சந்தித்துப் பேசி பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும் என்பது மட்டுமின்றி அவர்களை சந்திப்பதன் மூலம் ஆளும் நிர்வாகத்துக்கும் ஒரு செய்தியை நான் வழங்குகிறேன்.

ஓய்வு பெற்ற வீரர்கள், நம் நாட்டின் மதிப்புமிக்க சொத்து, அவர்களைப் புறக்கணிக்கக் கூடாது என்ற செய்தியை நான் சொல்ல விழைகிறேன். நான் சில கோவில்களுக்கும் வழிபாட்டுத் தலங்களுக்கும் கூட செல்கிறேன். அதன்

மூலம் "இதுதான் நம் அடையாளம், இதுவே நம் நம்பிக்கை" என்று மக்களுக்கு ஒரு செய்தியை வழங்குகிறேன். அதேபோல, ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் சந்திக்கும் போது, அவர்களுக்கு உரிய மரியாதை மற்றவர்களும் கொடுக்க வேண்டும் என்ற செய்தியை நான் உணர்த்துகிறேன். "முன்னாள் படையினர் நம்முடன் இருக்கிறார்கள் என்ற விழிப்பை பெற வேண்டும். அவர்களுக்கு உரிய மரியாதை தர வேண்டும்," என்பதை உணர்த்துகிறேன்.

நான் எங்கு சென்றாலும் அங்கே முன்னாள் படையினர் பொதுவாகவே தங்களுக்குரிய மருத்துவ பிரச்சனைகளை முன்வைப்பர். அரசு தனது நிதியை விடுவிக்கவில்லை என்றும் அதன் விளைவாக மருத்துவமனைகளுக்கு நிலுவைத் தொகை கிடைக்கவில்லை என்றும் அதனால் ஓய்வுபெற்ற ராணுவ வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உரிய சிகிச்சை அளிக்க மருத்துவ நிர்வாகங்கள் தயங்குவதாகவும் அறிந்தேன்.

இது ஒரு நிரந்தரப் பிரச்சனையாக தொடர்வதால், இது குறித்து நமது பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்புத்துறை செயலாளர் ஆகியோரை சந்தித்து கோரிக்கை வைத்தேன்.. ஒரு கட்டத்தில், கொஞ்சம் பணம் விடுவிக்கப்பட்டது. ஆனால் இது ஏதோ ஒரு முறை மட்டுமே விடுவிப்பது போன்ற சூழல் உள்ளது. இதை தொடர்ச்சியாக வெய்ய வேண்டும். இதில் நிலவும் பிரச்சனைகள் என்ன என்பதை அறிய முயற்சிப்பேன்.

பணியில் உயிர் துறந்த வீரரின் குடும்பத்திற்கு ஆதரவை வழங்கும் நடவடிக்கை, மாநிலத்திற்கு மாநிலம் மாறுபடுகிறது. அந்த வீரரின் குடும்பங்கள் கண்ணியமான வாழ்க்கையை நடத்த அனுமதிப்பதுடன் அதை உறுதிப்படுத்தக் கூடிய நிலையை நோக்கி நாம் பணியாற்ற வேண்டும்.

தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த நமது ராணுவ வீரர்கள் விஷயத்தில் நான் ஒரு யோசனையை முன்பு குறிப்பிட்டிருந்தேன். அதை தொடர்ச்சியாகவும் கூறி வருகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் எந்தெந்தப் பள்ளி அமைந்திருக்கிறதோ, அவற்றில் அந்த பகுதி அல்லது மாவட்ட வரம்பில் உயிரிழந்த ராணுவ வீரரின் படத்தை மாற்றி பெருமைப்படுத்துங்கள். அந்த வீரரின் உயிர்த்தியாக நாளில் அவருக்காக ஒரு சிறிய விழாவை ஏற்பாடு செய்யலாம். இதன் மூலம் அவர் பிறந்த ஊரும் கிராமமும் மாவட்டமும் பெருமைப்படும். மாணவர்கள், அவர்களின் படங்களைப் பார்த்து, இவர் எனது கிராமத்தைச் சேர்ந்தவர் என மார்தட்டி, அவரது வீரம் நிறைந்த தியாகத்தை நினைத்து பெருமைப்படுவர்.

இறந்த ஆன்மாவுக்கு நமது நன்றியை வெளிப்படுத்த இதுவும் ஒரு வழியாகும். இதற்கு பெரிய செலவு ஒன்றும் ஆகாது. இந்த யோசனைக்கு எதிர்ப்பு வரும் என்று நான் நினைக்கவில்லை. தேசப் பணியில் ஒரு வீரர் தனது உயிரை தியாகம் செய்யும்போது இன்னுயிரை வழங்க அவர் தகுதியானவர் என்று அடையாளப்படுத்தி அவரை காலத்தால் அழியாதவராக நாம் மாற்ற வேண்டும்.

இன்றைய நிகழ்ச்சியில் எழுப்பப்பட்ட சில பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட துறையின் கவனத்துக்கு எடுத்துச் செல்வேன். இந்திய அரசின் மூலம் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனைகளாக இருந்தால், பாதுகாப்பு அமைச்சகத்தின் கவனத்துக்கு அதை கொண்டு சென்று தீர்வு காண்பேன். தமிழ்நாட்டில் சுமார் 2 லட்சம் ஓய்வுபெற்ற ராணுவ வீரர்கள் மற்றும் வீர மங்கைகள் உள்ளனர். இது சிறிய எண்ணிக்கையல்ல.

முன்னாள் படை வீரர்கள் நலச் சங்கங்கள் எண்ணிக்கையில் பலவாறாக இருக்கலாம். நான் மாவட்டங்களுக்குச் செல்லும் போது, பகுதி, தாலுகா, மாவட்டம், மாநிலம் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய குழுவை உருவாக்க யோசனை கூறுவேன். அதை வாட்ஸ்அப் குழுவாக கூட உருவாக்கலாம். இன்றைய டிஜிட்டல் யுகத்தில் இப்படி அனைவரையும் ஒருங்கிணைப்பது சாத்தியமாகக் கூடிய விஷயம்தான். முன்னாள் படை வீரர்கள் சிறிய குழுவாக ஒரு அதிகாரியிடம் சென்று மனு கொடுக்கும்போது அதற்கு இருக்கும் தாக்கத்தை விட, ஒரு மிகப்பெரிய குழுவாக அல்லது அமைப்பாக அதே கோரிக்கை மனுவை ஒரு அரசிடம் வழங்கும்போது அதற்கான வலிமை அதிகமாகவே இருக்கும். இந்த இரண்டு செயல்முறைக்கும் வித்தியாசம் உள்ளது. இந்த டிஜிட்டல் குழுவை பிரச்சனைகளை எழுப்புவதற்கு மட்டுமே பயன்படுத்தாமல் ஒருவரையொருவர் அறிந்து புரிந்து கொள்ளவும், நிகழ்ச்சிகளை பரிமாறிக் கொள்ளவும் பயன்படுத்தலாம்.

நாம் அனைவரும் ஒரு 'குடும்பம்'. இந்த 'குடும்பத்தை' டிஜிட்டல் உதவியுடன் ஒரே குடும்பமாக நாம் மாற்ற வேண்டும். நமது மாநிலத்தில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2,500 - 3,000 படை வீரர்கள் ஓய்வு பெற்று மீண்டும் சிவில் வாழ்க்கைக்கு வருகிறார்கள். இவர்கள் அனைவரும் இந்த டிஜிட்டல் குழுக்களில் இணையும்போது அது ஒரு தாக்கத்தை உருவாக்கும். இதில் கிடைக்கும் நன்மை - முதலில், அவர்களின் குரல்கள் கேட்கப்படும், இரண்டாவதாக அது சமூகத்தில் ஒரு பெரிய விழிப்புணர்வை உருவாக்கும்.. சிதறி கிடப்பவர்களின் குரல்கள் சரியாகக் கேட்காது. ஆனால் நீங்கள் ஒன்றாகக் கூடினால், அது ஒரு சமூக விழிப்புணர்வை உருவாக்கும்.

நான் முன்பு சொன்னது போல், ஒரு சிப்பாய் ஒருபோதும் ஓய்வு பெறுவதில்லை. கோவிட், வெள்ளம் மற்றும் பிற பேரிடர் காலங்களில் நாம் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம்.

இரண்டு லட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உள்ள இந்த வீரர்கள் தேசம் மற்றும் சமூகத்திற்கான தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்காகவே தங்களை முன்பே நிரூபித்தவர்கள். இவர்களின் எண்ணிக்கை பலம் அவர்களை ஒரு வலுவான சக்தியாக காட்டும். இது சமூகத்தின் நேர்மறை சக்தியை அதிகரிக்கிறது.

எல்லா இடங்களிலும் நமக்கு நேர்மறை மற்றும் எதிர்மறை சக்திகள் உள்ளன. நீங்கள் அனைவரும் நேர்மறை சக்திகளின் அங்கம். நமது பலத்தை முதலில் நாமே உணர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். நிர்வாகத்திடம் சென்று

தீர்வு கேட்பது யாசகம் கேட்பது போல அல்ல. உங்களுக்கான தேவையை பெற கோரிக்கை விடுப்பது உங்களுடைய உரிமை. அதற்கு தீர்வை வழங்க வேண்டியது நிர்வாகத்தின் கடமையாகும். ஆனால் இந்த புரிதலுக்கு அடிப்படை 'விழிப்புணர்வு'. அதுவே முதலில் ஏற்பட வேண்டும்.

நிர்வாகம் தன் கடமையைச் செய்யும் என்றாலும், இரண்டு லட்சத்துக்கும் மேலான உறுப்பினர்களைக் கொண்ட இந்தப் பெரிய குடும்பம் ஒன்றுகூடி டிஜிட்டல் முறையில் ஒன்றிணைந்தால் உங்கள் குரல் பலமாகும். இதை சாத்தியமாக்கினால் இது ஒரு 'பெரிய மாற்றத்தின்' தொடக்கமாக இருக்கும் என்று நினைக்கிறேன். இந்த மாற்றம் சமுதாயத்திற்கு நல்லது, ஏனென்றால் நீங்கள் ஒரு வலுவான நல்ல சக்தியாக விளங்குவது நம் தேசத்திற்கும் நல்லது.

தமிழ்நாட்டை தேசியவாதம் குறைவாக உள்ள இடமாக எங்கோ சிலர் கூறுகிறார்கள். அப்படி பேசியவர்கள் பற்றி நான் வியக்கிறேன். அவர்களின் கூற்று உண்மைக்கு வெகு தூரத்தில் உள்ளது. தேசப் பாதுகாப்பில் தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் தான் உள்ளது. நமது தேசிய சுதந்திர போராட்டத்தில் தமிழ்நாடுதான் முன்னணியில் இருந்தது.

தமிழ்நாட்டை சேர்ந்த தேசிய சுதந்திர போராட்ட வீரர்களின் பட்டியலைத் தெரிந்துகொள்ள நான் விரும்பியபோது, ஆரம்பத்தில் எனக்கு நாற்பதுகளில் கூட இல்லாத சில பெயர்கள் வழங்கப்பட்டன. எனக்குள்ள பொறுப்புணர்வுடன் இதை இங்கே சொல்கிறேன். தமிழ்நாட்டைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான மக்கள், நம் தேச விடுதலைக்காகப் போராடிய இடத்தை இங்கே நாம் காண்கிறோம். பொதுவெளியில் அதிகம் அறியப்படாத அந்த நிஜ நாயகர்களில் பாடப்படாத 100 நாயகர்களை முதல் நடவடிக்கையாக நாங்கள் முன்னிலைப்படுத்தத் தொடங்கியுள்ளோம். வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கை வேலு நாச்சியார் போன்ற பெரும் சுதந்திர நாயகர்கள் அந்த காலத்தில் வாழ்ந்து இன்னுயிரை தியாகம் செய்துள்ளனர்.

இவர்களை போல தியாகம் செய்த பலர் இன்னும் நமக்குத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய அறியப்படாத மற்றும் பாடப்படாத நாயகர்களை நமது பல்கலைக்கழகங்களின் இளம் மற்றும் ஆர்வமுள்ள ஆராய்ச்சி அறிஞர்கள் அடையாளம் அடையாளம் கண்டு வருகின்றனர். இந்தப் பணியை நமது ஆராய்ச்சியாளர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செய்து வருகிறார்கள். பாடப்படாத நாயகர்கள் பட்டியல் பல ஆயிரம் பேரைக் கடந்து செல்வதால் நமது ஆராய்ச்சியாளர்களின் முன்முயற்சி தொடரும். தமிழ்நாடு இந்தியாவின் ஆன்மிக தலைநகரம் மட்டுமல்ல, சுதந்திரப் போராட்டத்திற்கான பாதைக்கும் உந்து சக்தியாக விளங்கியது என்பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்டுள்ளது. நமது மாநிலம் தான் அதிக எண்ணிக்கையிலான சுதந்திர போராட்ட வீரர்களை தேசத்துக்கு வழங்கிய மாநிலம். சுதந்திரத்திற்காக முப்பதாயிரம் இன்னுயிரை ஒரு மாநிலம் கொடுத்திருப்பது போல இந்தியாவில் எந்தவொரு மாவட்டமோ, மாநிலமோ செய்திராத தியாகம் என்று நான் நினைக்கிறேன். எனவே, நமது மாநிலத்தை

தேசியவாதம் குறைவாக உள்ள இடமாக இனி எவரேனும் சொன்னால் அவர் பொய் உரைக்கிறார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

எங்களின் அழைப்பை ஏற்று இங்கு வந்து கலந்துரையாடிய உங்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்ட அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி வரும் நாட்கள், உங்கள் அனைவருக்கும் சிறப்பாக அமைய வாழ்த்துகிறேன். என்னையும், ராஜ் பவனையும் பொறுத்த வரையில், உங்கள் வாழ்க்கையை எளிதாகவும், கண்ணியமாகவும் மாற்ற எங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதில் எங்களின் பொறுப்புகளை உணர்ந்து நடப்போம்.

மிக்க நன்றி.

******************************

முன்னதாக, இந்நிகழ்ச்சியில் மேஜர் ஜெனரல் (ஓய்வு) முரளி கோபாலகிருஷ்ணன் வரவேற்புரையாற்றினார்.

லெப்டினன்ட் கர்னல் (ஓய்வு) என். தியாகராஜன், மூத்த துணைத் தலைவர் - அகில பாரதிய பூர்வ சைனிக் பிரரிஷத் (ABPSSP), ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு) எஸ். சுவாமிநாதன், மேஜர் (ஓய்வு) நடராஜன், திருமதி. பி. வானதி தேவி, ஹவில்தார் பழனியின் (மரணத்திற்குப் பிந்தைய வீர சக்கரம் விருது பெற்றவர்), மனைவி, இராமநாதபுரம் ஆகியோர் நிகழ்ச்சியில் பேசினர்.

டாக்டர் ஶ்ரீராம், வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர்; திரு. மோகன்ராஜ், மக்கள் தொடர்பு அதிகாரி, வேல்ஸ் பல்கலைக்கழகம் ஆகியோர், தங்களுடைய கல்வி நிறுவனத்தில் முன்னாள் ராணுவ வீரர்கள், வீர மங்கைகள் மற்றும் போரில் காயமடைந்த வீரர்களின் குடும்பத்தினருக்கு 10% இலவச இடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் முன்னாள் போர் வீரர்களின் பிள்ளைகளுக்கு சலுகை கட்டணத்தில் படிப்பை வழங்கும் கடிதத்தை மாண்புமிகு ஆளுநரிடம் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் கீழ்க்கண்ட முன்னாள் படை வீரர்கள், முன்னாள் போர் வீரர்கள், வீர மங்கைகள் ஆகியோருக்கு ஆளுநர் அவர்கள், சால்வை அணிவித்து நினைவுப் பரிசை வழங்கினார்.

ஏர்-வைஸ் மார்ஷல் ஏவிஎம் சுவாமிநாதன்; கர்னல் கணேசன் (1965 போர் நடவடிக்கை); லெப்டினன்ட் பார்த்திபனின் தந்தை மேஜர் நட்ராஜன், கீர்த்தி சக்ரா; வாரன்ட் அதிகாரி பால தண்டாயுதன்.

'வீர மங்கை' பிரிவில் திருமதி. ஷோபா சுதாகர், மேஜர். சுதாகர் மாதவனின் மனைவி (1987 இலங்கை நடவடிக்கை); மேஜர் விநாயக் சீதாராமனின் மனைவி திருமதி.வேதவல்லி விநாயக்; ரெஜிமென்ட் ஹவில்தார் ஆர்.எச்.எம்.ஏகாம்பரமின் மனைவி திருமதி. இ.குமாரி; ஹவில்தார் பழனியின் மனைவி (வீர் சக்ரா) திருமதி வானதி தேவி, திரு. மகேஷ் நேதாஜி - பாரத் அறக்கட்டளை (ஜஎன்ஏ பிரிவு); வீர மங்கைகளை ஆதரிக்கும் ஹஸ்கி இன்ஜெக்ஷன் மோல்டிங் சிஸ்டெம்; டாக்டர். லட்சுமி - முன்னாள் ராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு மனநல ஆதரவு வழங்கும் மாஸ்டர் மைண்ட் அறக்கட்டளை; திருமதி அர்ச்சனா மகேஷ், நிறுவன இயக்குநர், ஞானமுத்ரா பரதநாட்டிய குழு.

முன்னதாக, ஞானமுத்ரா குழுவினர் 'வீரம்' என்ற தலைப்பில் பரதநாட்டியம் நடன நிகழ்ச்சியை நடத்தினர். இவ்விழாவில் மேஜர் மாதவன் நன்றியுரை ஆற்றினார்.

---

ஆளுநர் மாளிகை, சென்னை-22 வெளியீடு :-

நாள் : 21.05.2023 மக்கள் தொடர்பு அலுவலகம்